1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சி மாவட்டத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் கல்லக்குடி-புள்ளம் பாடி குடிநீர்த் துணைத் திட்டத்தின் அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டு வருகிற 1992 முதல் பொதுமக்களுக்கு முறையான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 133, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

133—

ரேசன் கடைகளில் சிறு தானியங்கள் வழங்குதல்

*10983 —திரு. நா .சா பழனிசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ரேசன் கடைகளில் அரிசி கோதுமையுடன் புரதச்சத்து அதிகமுள்ள மற்ற சிறுதானியங்களையும் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசிய பண்டங்களை விநியோகிப்பதைத் தவிர சிறு தானியங்களையும் விநியோகிப்பதைப் பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசினிடத்தில் இல்லை.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு தானியங்கள் என்றாலே அனைத்துமே அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலில் தான் வருகிறது. இன்றைக்கு சிறு தானியங்கள் மானாவாரியிலும், கிணற்றுப் பாசனத்தின் மூலம் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு அரசின் கொள்முதல் சலுகை கொடுக்கப்படுவது இல்லை. எனவே, அரசு இந்த புரதசத்து மிக்க இந்த தானியங்களையும் கொள் முதல் செய்து ரேஷன் கடைக்ளில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 18

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் அவ்வாறு செய்யப் படுகிறது. கர்நாடகத்தில் ராகி, சோளம் போன்றவைகள் கடைகளில் விற்பனை செய்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட தானியங்களை தமிழ்நாட்டு மக்கள் வாங்கிச் சாப்பிடுவார்களா என்பது தான் எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ராகி, மக்காச்சோளம், சோளம், போன்ற தானியங்களில் தான் அதிகமான் புரதச்சத்து இருக்கிறது. இன்றைக்கு கோழி, மாடுகளுக்கு தீவனமாக மக்காச்சோளம், சோளத்தை வழங்குகிறார்கள் என்றால் கோழிகள் அதன் மூலமாக அதிகமான முட்டை இடுகிறது. மாடுகள் அதிகமான பாலைக் கொடுக்கிறது என்ற காரணத்தால் தான் அதை உபயோகம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட புரதச் சத்து மிக்க அந்த தானியங்களை ஏன் தமிழக மக்களும் அந்த தானியங்களை உபயோகிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்து வதற்காக அரசு அதை ரேஷன் கடைகளில் ஏன் விநியோகிக்கக் கூடாது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே, கோழிக்குப் பயன்படுத்துகிறார்கள் ஆகவே, மனிதர்கள் ஏன் அதைச் சாப்பிடக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். புரதச் சத்து உள்ள பலப் பொருட்கள் இருக்கின்றன. அவைகளை சாப்பிடுவதும், வாங்காததும், அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட தானியங் களைச் சாப்பிடுவது நல்லது தான். ஆனால் அரசாங்கத்தின் மூலமாகத் தான் அதை வற்புறுத்த முடியாது. விவசாயச் சங்கம் அப்படிப்பட்ட ஒரு பிரச்சாரத்தை எடுத்துச் செய்ய லாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறை இன்றைக்கு நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களும், ஏழையெளிய மக்களும் பயன்படுகிற அளவில், இந்த நாட்டு மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகள், அத்தியா வசியமான பொருள்கள் என்னவென்பதை தெரிந்துகொண்டு நாமே நம்முடைய இந்த சங்கங்களின் மூலமாக விநியோகம் செய்வதற்கு ஒரு பரிட்சார்த்தமான முறையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மக்கள் அதிகமாக வாங்கி சாப்பிடுகின்ற பொருள்களை விநியோகம் செய்துகொண்டு இருக்கிறோம். இதுபோல, ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு பொருள்களை விநியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கூட இது போல சில தேவையான, அன்றாடம் பயன்படுத்துகிற சில பொருள்களையும் நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். வேறு குறிப்பிட்ட பொருள்களை விற்கவேண்டும் என்று ஆலோசனை வருமானால் அவற்றை அரசு பரிசீலனை செய்ய தயாராக இருக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். எழுந்து நின்று கொண்டிருக்கக்கூடாது. திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ரேஷன் கடைகளிலே பணி புரியக்கூடிய ஊழியர்கள் நீண்ட நாட்களாக, பல ஆண்டுகளாக ஒரே ஊரிலே ரேஷன் கடையிலே பணி புரிந்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பணிபுரிந்து வருகிற நேரத்திலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன். இது என்னென்ன தானியங்களைக் கொடுப்பது என்பது பற்றிய கேள்வி. நீங்கள் ஊழியர்களைப் பற்றிக் கேட்பது என்று போனால் அது விரிவான கேள்வியாகப் போய்க்கொண்டிருக்கும். அதற்கு தனிக் கேள்வியாகப் போடவும். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடைகளிலே ஒரு குடும்பக் கார்டுக்கு 12 கிலோ அரிசி கொடுக்கிறார்கள். மேலும் கூடுதலாக அரிசி கொடுக்க ஆவன செய்யப்படுமா? அந்த அரிசி கொடுக்கும்போது, குலேபகாவலி படத்தில் ஈ.வி. சரோஜாவும், சந்திரபாபுவும் பாடியது போல பக்கா படிக்கு முக்கா படி அளக்கிறார் என்கின்ற மாதிரி அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துகிற அளவில் குறைந்த அளவில் போடுகிறார்கள். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1993 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வேண்டாம். இது எல்லாம் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. அளவு குறைவாக இருக்கிறது என்பதோடு நிறுத்துங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல. மொத்தத்தில் குடும்பக் கார்டுகள் தமிழ்நாட்டில் போலி கார்டுகள் எவ்வளவு உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? புதிய குடும்பக்கார்டுகள் எப்போது கொடுத்து முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். கேள்விகளின் எண்ணிக்கை போதும். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்,

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் நீண்ட நாட்களாக அந்த கடையின் பக்கம் போக வில்லை என்று நான் கருதுகிறேன். அவர் சொல்வதெல்லாம் ஒரு காலத்திலே இருந்தது. இன்றைக்கு இந்த புரட்சித் தலைவி யின் ஆட்சியில் கடுமையான நடவடிக்கை எடுத்து எங்கே யார் அளவைக் குறைத்து விற்கிறார்களோ அவர்களை எல்லாம் வேலையை விட்டு நீக்கியிருக்கிறோம். அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக் கிறது. கடைக்கு கொண்டு வந்து கொடுக்கும்போதே குறைத்து கொடுக்கின்ற ஒரு வழக்கம் இருந்தது. அதன் மீதும் நட வடிக்கை எடுத்திருக்கிறோம். அதை கண்காணிப்பதற்கு என்றே கிடங்கிலே இருந்து கடைக்கு கொண்டுபோய் சேர்ப்பதற்காகவே ஆயிரம் இன்ஸ்பெக்டர்களை நியமித்து அதையும் கண் காணித்து இருக்கிறோம். இதையும் மீறி எங்காவது நடக்கு மானால் அதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைக்கு எங்கும் இல்லை இப்படி எடைக்குறைவு இல்லை என்கிற நிலையை ஏற்படுத்தி யிருக்கிறோம், மறுபடியும் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலைமை வராமல் இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிற புழுங்கல் அரிசி கலராக இருப்பது மட்டுமல்லாமல் அது சரியான அரிசி இல்லை என்று மக்கள் எல்லாம் குறைபட்டுக்கொண்டிருக்கிறார் கள். அதை மாற்றி நல்ல அரிசியாக வழங்குவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டாவிலே தஞ்சை மாவட்டம்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 18]

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து குறுவை நெல்லை நாம் விலைக்கு வாங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த நெல்லை நமக்கு விற்கிறார்கள். அந்த நெல்லை அரிசி ஆக்கும்போது அது கொஞ்சம் கலராகத்தான் வருகிறது. ஆனால் அதில் எனக்கும் அப்படிப்பட்ட சந்தேகம் வந்து சமைக்கச் சொல்லிப் பார்த்தேன். சமையல் செய்தபிறகு அது நன்றாக இருக்கிறது. மற்ற அரிசி மாதிரிதான் சமையல் செய்த பிறகு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். வேண்டுமென்றால் தஞ்சாவூர்காரர்களுக்கு மட்டும் அதை கொடுத்துவிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால் தஞ்சையிலே வாங்கிய அந்த குறுவை நெல்லை அரிசியாக்கி தஞ்சாவூருக்கே கொடுக்கிறோம். இப்போது எல்லா ஊர்களுக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே உள்ள உண்மை என்னவென்று சொன்னால் அதிலே கலர் நிறம் வித்தியாசமாக இருந்தாலும் பார்ப்பதற்கு அப்படி இருக்கும். சமையல் செய்தபிறகு மற்ற அரிசியைப் போல நல்ல சாதமாகத்தான் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சிறுதானியங்களை விரும்பி உண்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அரசு சிறு தானியங்களை ரேஷன் கடைகள் மூலமாக வழங்குவது இல்லை என்ற கொள்கை முடிவை எடுத்திராவிட்டால் ஒவ்வொரு ரேஷன் கடை பகுதியிலும் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதை கண்டறிந்து 'இன்டென்ட்' வாங்கி அந்த அடிப்படையில் ரேஷன் கடைகளிலே சிறுதானியங்களை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை. இந்த சிறுதானியங்கள் பெருமளவில் மக்களால் வாங்கி சாப்பிடப்படவில்லை. அதுவும் நம்முடைய கடைகள் மூலமாக இதை இதுவரை நாம் கொள்முதலும் செய்யவில்லை. ஆகவே இது அரசினுடைய கொள்கைப் பிரச்சினை. இது தேவைப்படுமானால் அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.